| | |
|---|---|
| **வாக்குமூலம்** Date: 01.02.2024 | |
| நீதிமன்றம் : குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மணப்பாறை | |
| வழக்கு எண்: CC 5/2023 | |
| வழக்கு சாட்சி : PW1 | |
| பெயர் : திருமதி. கிரித்திகா | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. வசந்தகுமார் | தொழில் : சுயதொழில் |
| கிராமம் : விடத்திலாம்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : மணப்பாறை | வயது : 33 |
| ( எதிரிகள் ஆஜர், வழக்கறிஞர் ஆஜர் ) | |

---

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**1**. 1ம் எதிரி எனது கணவர் என்றால் சரிதான். எனக்கும், எனது கணவருக்கும் திருமணமாகி பத்து வருடமாகிறது என்றால் சரிதான். எனக்கும், எனது கணவருக்கும் ரித்வின் என்ற மகன் பிறந்து எட்டு வருடங்களாகிறது என்றால் சரிதான். தற்போது எனது கணவர் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்று சொன்னால் வழக்கிற்காக சொல்கிறார். நான் சேர்ந்து வாழ தயாராக உள்ளேன். கவுன்சிலிங்கில் 6 முறை நடைபெற்றும் வழக்கிற்காக சொல்கிறார்கள், என்னை அழைத்து சென்று வாழ்வதற்கு எனது கணவருக்கு விருப்பமில்லை. 6 முறையும் எனது கணவர் வாழ்வதற்கு தயாராக உள்ளார் என்றும், நான்தான் வாழ மறுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

2. நான் தற்போது என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் மை லைப் ஸ்டைல் என்ற பெயரில் ஆயுர்வேதம் Products மார்கெட்டிங் தொழில் Distributor ஆக வேலை செய்து வருகிறேன், நான் செய்யும் வியாபாரத்தை பொறுத்து எனக்கு பதவி உயர்வு உள்ளது என்றால் சரிதான். முதலில் Team Coordinator, Area Coordinator, District Team Coordinator, Zonal Team Coordinator, State Team Coordinator இதில் என்னவாக நான் உள்ளேன் என்றால் State Team Coordinator ஆக உள்ளேன். இதில் உள்ள ஒவ்வொரு Stage க்கும் எனக்கு சம்பள உயர்வு உண்டு என்றால் இல்லை. கமிஷன் உண்டு.

3. தற்போது மாதம் எவ்வளவு சம்பளம் பெற்று வருகிறேன் என்றால் தோராயமான ரூ. 30,000/–, ஒரு சில மாதங்களில் எதுவுமே இல்லாமல் இருக்கும். எனது வங்கி கணக்கை பார்த்தால் மேற்கண்ட சம்பள விபரம் தெரியவரும் என்றால் சரிதான். 2020 ம் ஆண்டில் நான் இந்த பணியில் சேர்ந்துவிட்டேன் என்றால் ஆமாம். 2020 ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு Stage க்கும் நான் வெளியில் செல்வது வழக்கம் என்றால் சரிதான். ஊட்டி, கொடைக்கானலுக்கு சென்று வருவது வழக்கம் என்றால் தவறு, ஏர்க்காடு மட்டும் ஒரு நாள் மட்டும் பயிற்சிக்காக செல்வது வழக்கம். எனது கணவரும் இந்த தொழில் பயிற்சிக்காக என்னுடன் வருவார் என்று தானாகவே சாட்சி சொல்கிறார்.

4. எனது கணவர் குழந்தையை விட்டுட்டு தனியாக நான் செல்கிறேன் என்பதை எனது கணவர் கண்டித்தால் தான் பிரச்சனை என்று சொன்னால் இது மட்டும் பிரச்சனை இல்லை. ஆரம்பத்தில் எனது கணவர் நான் வெளியே செல்வதற்கு சம்மதம் தெரிவித்தார். பின்னிட்டு ஆட்சேயபணை தெரிவித்தார். இந்த Stage ல் நான் அதிகமான மார்கெட்டிங் செய்துவிட்டேன் என்று மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் TN 45 CY 3218 என்ற Maruthi Ignis என்ற காரை கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. எனது சொந்த வருமானத்தை கொண்டு தவணை முறையில் வாகனத்தை வாங்கியுள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஜெராக்ஸ் ஆவணத்தில் நான் வாங்கிய கார் உள்ளது என்றும், அதில் நான் உள்ளேன என்று சொன்னால் நகல் என்பதால் தெளிவாக தெரியவில்லை.

5. மேற்படி காரை எப்போது வாங்கினேன் என்றால் 2021 ம் ஆண்டு டிசம்பர் மாதம் வாங்கினேன். காருக்கு மாதம் ரூ. 9915/– மாத தவணையாக செலுத்தி வருகிறேன். மார்கெட்டிங்கின் பதவி உயர்விற்காக மேற்படி காரை மேற்படி நிறுவனம் வழங்கியுள்ளார்கள் என்றும் மாத வருமானம் ரூ. 1 லட்சத்திற்கு மேல் பெற்று வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் M.A. English Literature படித்துள்ளேன் என்றால் சரிதான். எனது கணவர் 12 ம் வகுப்பு படித்துள்ளார் என்றால் சரியல்ல, எனது கணவர் B.com., MBA படித்துள்ளார். நான் M.A. English Literature படித்துள்ளதாலும், எனது கணவர் 12 ம் வகுப்பு படித்துள்ளதால் தான் எங்களுக்குள் பிரச்சனை என்று சொன்னால் சரியல்ல.

6. எனது கணவருக்கு தற்போது எந்த வேலையிலும் இல்லை என்று சொன்னால் தோகமலையில் சொந்தமாக நகைககடை நடத்திவருகிறார்.

எனது கணவர் தோகமலையில் நகைக்கடை ஏதும் நடத்தவில்லை என்றும், வேலையில்லாமல் இருந்து வருகிறார் என்றும், நான் அதிகமாக சம்பாதித்து வருவதால் எனது கணவருடம் சேர்ந்து வாழ மறுத்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் நகைகடைக்கு சென்றுவந்துள்ளேன். தற்போது எனது கணவர் நகைகடை வைத்துள்ளாரா என்றால் அது பற்றி தெரியாது.

7. திருமணம் நடந்த மூன்றாவது நாள் எனது கணவரை விட்டு பிரிந்து தனியாக கேரளா சென்றுவிட்டேன் என்றும், எனது சகோதரர் தான் என்னை அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. எனது கணவரிடம் சொல்லிவிட்டு எனது தோழிக்கு திருமணம் என்று நான் எதிர்மனுதாரரை அழைத்த போது நகைக்கடையில் வேலை இருப்பதாக சொல்லி நான் எனது தம்பியை அழைத்து கொண்டு கேரளாவிற்கு எனது மாமியாரிடம் சொல்லிவிட்டுதான் சென்றேன்.

8. மேற்படி நான் சொல்வது எல்லாம் தவறு என்றும், நான் காணாமல் போனதால் தேடி கண்டிபிடித்தார்கள் என்றால் சரியல்ல. நான் கேரளாவிற்கு சென்று வந்ததால் எனது கணரிடம் எனது மாமனார் சத்தம் போட்டதால் அதனால் எனது கணவர் வீட்டிற்கு வரவேண்டாம் என்று சொன்னதால் எனது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டேன். அதன்பின்பு பஞ்சாயத்து பேசி மீண்டும் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் பஞ்சாயத்து பேசவில்லை. வீட்டிற்கு எனது கணவர் வந்து என்னை அழைத்து வந்தார்.

9. பஞ்சாயத்து பேசி, நான் இனிமேல் வெளியில் செல்லமாட்டேன் என்று கூறியதன் அடிப்படையில் தான் எனது கணவர் என்னை அழைத்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் இனிமேல் என்னை திட்டமாட்டேன் என்று சொல்லி எனது வீட்டிலிருந்து என்னை எனது கணவர் வீட்டிற்கு அழைத்து வந்தார். 2021 ம் ஆண்டிலிருந்து எனது கணவரை விட்டு பிரிந்து வாழ்கிறேன் என்றால் 2019 ம் ஆண்டில் ஒரு பிரச்சனை ஏற்பட்டது. அடித்து வெளியில் துரத்திவிட்டார்கள். ஜனவரி 2020 ம் ஆண்டில் எனது கணவரிடம் சேர்ந்து வாழ்ந்தேன். மறுபடியும் 2021 ம் ஆண்டு பிரச்சனை ஏற்பட்டு பிரிந்துவிட்டோம்.

10. 07.11.2021 ம் ஆண்டு பிரிந்த நான், தேவகி, பாலு, பிரதீப் ஆகியோர்கள் எதிரிகளை அடித்து காயப்படுத்தியது சம்மந்தமாக மணப்பாறை போலீசார் குற்ற எண். 1074/2021 u/s.294(b), 323,506(2) IPC

ன் படி வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் அந்த வழக்கு பதிவு செய்தது பற்றி எனக்கு தெரியாது. எனது மகனின் உடைமைகளை எடுக்கசென்றிருந்தேன் எதிரிகள் என்னை வீட்டிற்கு விடவில்லை. எனது இருசக்கரவாகனத்தை பிடித்து தள்ளி என்னை அடித்து சேதப்படுத்தினார்கள். நான் சொல்வது தவறு என்றும், எதிரிகளை நாங்கள் அடித்தால் தான் பிரச்சனை என்று சொன்னால் சரியல்ல.

11. நீதிமன்றத்தில் புகாரில் என்ன கூறினேனா அதைத்தான் நீதிமன்ற முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நகை, பணம் எனது அம்மா வீட்டில் வாங்கி வரும்படி எனது கணவரும், மாமனாரும், மாமியாரும் என்னை தொந்தரவு செய்யதாக எந்த தேதியில், எந்த இடத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை. மேற்படி சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகின்ற இடம் எனது மாமனார் வீடு மணப்பாறையில் உள்ள ராஜீவ் நகர் தான் என்றால் சரிதான். ராஜீவ் நகரிலிருந்து விடத்திலாம்பட்டி ஊர் 3–4 கி.மீ இருக்கும் என்றால் சரிதான் .

12. சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகின்ற இடத்தை சுற்றி வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் சுற்றியுள்ள வீடுகளில் உள்ள நபர்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர்களை யாரையும் இந்த வழக்கில் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சாட்சிகளாக உள்ள தேவகி எனது அம்மா, வீராசாமி, மணி, ஸ்ரீ ராமு, சக்திவேல் ஆகியோர்கள் விடத்திலாம்பட்டியை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். ராஜாராம், மாமனார் தம்பி ராஜேந்திரன், ராஜா ஆகியோர்கள் மூலம் சமாதானம் பேசினோம் என்று எனது புகாரிலோ, போலிசார் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

13. எதிரிகள் பேச்சுவார்த்தை ஒத்துவரவில்லை என்றும், எனது அம்மா வீட்டில் நான் ஒரு வருடம் இருந்தேன் என்பதை நான் புகாரிலும், போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 2020 ஜனவரி மாதம் எனது கணவரின் சித்தப்பா ராஜேந்திரன் மற்றும் முக்கிய உறவினர் ரவி ஆகியோருடன் மீண்டும் சமாதானம்பேசி எனது கணவருடன் சென்றேன் என்ற விபரத்தை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது சித்தி கோகிலா ரூ. 1,50,000 /– பணமும், எனது அம்மாவிடம் ரூ. 50,000/– பணமும் எனது கணவரிடம் கொடுத்தேன் என்ற விபரத்தை போலிசார் விசாரணையிலும், புகாரிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். போலிசாரிடம் நேரடியாக சொன்னேன். மதுரை உயர் நீதிமன்றத்திலும் சொல்லியுள்ளேன்.

14. ரூ. 5 லட்சம் பணம் எனது மாமனாரும், எனது கணவரும் யார் முன்னிலையில் எந்த தேதியில், எந்த இடத்தில் கேட்டார்கள் என்ற விபரம் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ நடந்த தேதியில் மருத்துவமனை சென்றேனா என்றால் சென்றேன். அதற்கான மருத்து சீட்டுகளை போலிசார் விசாரணையின் போது கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். நான் மருத்துவமனை செல்லவில்லை என்றும், மருந்து சீட்டுகளை போலிசார் விசாரணையில் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

15. நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போன்று சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றும், வழக்கிற்காக எனது கணவர் அடித்துள்ளதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்பு தனியாக வெளியே சென்று வருவதாலும், குழந்தை பிறந்த பின்பும், மார்க்கெட்டிங் என்ற அடிப்படையில் அடிக்கடி வெளியே சென்று 2, 3 நாள்கள் தங்கி வருவதால் எனது கணவர் அன்பாக போகக்கூடாது என்றும், குழந்தைகளின் வாழ்க்கை கெட்டுபோகிவிடும் என்று சொல்லியும் அதை கேட்காமல் நான் சென்றேன் என்றும், எனது கணவரின் படிப்பு குறைவு என்பதாலும், எனது படிப்பு அதிகமாக உள்ளதாலும், அதிகமாக சம்பாதிப்பாதாலும் எனது கணவரின் பேச்சை கேட்காமல் சென்றதால் எனது கணவர் என்னை கண்டித்தார் என்று சொன்னால் சரியல்ல. கால்புணர்ச்சி காரணமாக எனது கணவர் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. திருமண நாளிலிருந்து 6 வருடம் நான் வேலைக்கு செல்லாமல், எங்கு செல்லாமல் வீட்டில் தான் இருந்தேன் என்றும், 2020 ம் ஆண்டில்தான் நான் வேலைக்கு சென்றேன். எனது கணவருக்கு வருமானம் இல்லாததால் தான் வேலைக்கு சென்றேன். மேற்படி விபரங்களை எனது புகாரிலும், போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை.

16. தற்போது குழந்தைகளின் எதிர்காலத்தை கருதி, தற்போதும் 1ம் எதிரி என்னுடன் சேர்ந்து வாழதயாராக உள்ளார் என்றும், நான் தான் சேர்ந்து வாழ மறுத்துவருகிறேன் என்றால் சரியல்ல. எந்தவிதமான வரதட்சணையும், எந்த தொந்தரவும் செய்ததது கிடையாது என்று சொன்னால் அது பொய். நான் பொய் வழக்கு தாக்கல் செய்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| **வாக்குமூலம்** | Date: 01.02.2024 |
| நீதிமன்றம் : குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மணப்பாறை | |
| வழக்கு எண்: CC 5/2023 | |
| வழக்கு சாட்சி : PW2 | |
| பெயர் : திருமதி. தேவகி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. பாலு | தொழில் : வீட்டுகுடித்தனம் |
| கிராமம் : விடத்திலாம்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : மணப்பாறை | வயது : 61 |
| ( எதிரிகள் ஆஜர், வழக்கறிஞர் ஆஜர் ) | |

---

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**1**. நான் குடும்பத்தோடு விடத்திலாம்பட்டியில் குடியிருந்து வருகிறேன் என்றால் ஆமாம். எனது மகள் கிருத்திகா மணப்பாறை ராஜீவ்நகரில் குடியிருந்து வந்தார் என்றால் ஆமாம். ராஜீவ் நகரை சுற்றி நிறைய வீடுகள் உள்ளது என்றால் ஆமாம். ஆரம்பத்திலும் நானும், எதிரிகளும் முறைப்படி பெண் பார்த்து நிச்சயம் செய்து திருமணம் நடந்தது என்றால் சரிதான். இரண்டு குடும்பத்துடன் சந்தோஷமாக திருமணம் செய்து வைத்தோம் என்றால் சரிதான்.

2. திருமணம் செய்து மூன்று நாள்களிலியே எனது மகள் கேரளா சென்றுவிட்டார் என்றால் தவறு. பத்து நாள் கழித்து அவரது தோழிக்கு முடியவில்லை என்று சொல்லி சென்றார். மகள் குடும்பத்தில் நடக்கிற விபரங்கள் எனது மகள் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது மகள் எவ்வளவு நாளைக்கு பின்பு மேற்படி விபரங்களை என்னிடம் சொன்னார் என்றால் எனது மகளுடன் ஒருமாதம் கூட அவரது கணவருடன் சேர்ந்து வாழ எதிரிகள் விடவில்லை.

3. மேற்படி சம்பவம் சம்மந்தமாக போலிசில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை, எதிரிகள் எங்கள் சொந்தம் என்பதால் கொடுக்கவில்லை. எனது மகள் எப்போதுவேலைக்கு சென்றார் என்றால்

திருமணமாகி மூன்று வருடம் கழித்து வேலைக்கு சென்றார். எதிரிகள் ஏதும் செய்யாததால் தான் வேலைக்கு சென்றார். எனது மகளிடம் கார் உள்ளதா என்றால் உள்ளது. வேலை சம்மந்தமாக செல்லவேண்டும் என்றால் காரில் தான் செல்வார் என்றால் எந்த வேலையாக இருந்தாலும் காரில் செல்வார். மற்ற நேரங்களில் இருசக்கரவாகனத்தில் செல்வார்.

4. சம்பவம் நடந்ததாக சொல்லும் 2021 ம் ஆண்டில் சம்பவம் நேரத்தில் நான் எனது மகள் வீட்டில் நான் இருந்தேனா என்றால் அடிக்கடி நான் செல்லவில்லை. எனது மகள் அடிப்பட்டதற்கு மருத்துவமனை சென்று சிகிச்சை சென்றோமா என்றால் ஊமகுத்தாக குத்தினார்கள், மருத்துவமனை சென்றோம். எந்த மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் தர்ம ஆஸ்பத்திரிக்குசென்றோம். தேதி தெரியுமா என்றால் தேதி தெரியாது, 2021 ம் ஆண்டு. போலிசார் விசாரணையில் தர்ம ஆஸ்பத்திரிக்கு 2021ம் ஆண்டு சென்றோம் என்ற விபரத்தை காவல்நிலையத்தில் சொல்லி போலிசார் அதற்கான ஆவணங்களை எடுத்து கொண்டார்களா என்றால் நான் வெளியில் இருந்து கொண்டேன். எனது கணவரும், எனது மகளும் சென்றார்கள்.

5. போலிசார் மேற்படி காயச்சான்றிதழை பற்றி என்னிடம் காட்டினார்களா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் நான் தான் எனது மகளுக்கு பணம் கொடுத்தேன் என்ற விபரத்தை போலிசார் விசாரணையின் போது சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது மகளுக்கு நெஞ்சு, தொடை ஆகிய பகுதிகளில் வீங்கிவிட்டது, முடியை பிடித்து இழுத்து அடித்தார்கள் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அது போன்று சொல்லவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. போலிசில் புகார் கொடுத்து அந்த புகார் மீது நடவடிக்கை இல்லை என்பதால் மேல் காவல்துறை அதிகாரிகளுக்கு புகார் அனுப்பினோமா என்றால் ஆமாம். புகார் கொடுத்து ஒரு வாரம் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் காவல் உயர் அதிகாரியான ஐஜி டம் புகாரை கொடுத்தோம். புகாரை எனது மகள் தான் கொடுத்தார் என்றால் நானும் உடன் சென்றேன். ஐஜி ஆபிசில் புகார் கொடுத்த நகலை போலிசார் விசாரணையில் கொடுத்துள்ளோமா என்றால் அது எனது மகளுக்கு தான் தெரியும். முதலில்

நாங்கள் மணப்பாறை சட்ட ஒழுங்கு காவல் துறையினரிடம் புகார் கொடுத்தோம். அந்த புகாரை அனைத்துமகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கசொல்லி அவர்களாகவே மாற்றி கொண்டார்கள். இரண்டு காவல்துறையினரும் நடவடிகக்கை எடுக்கவில்லை என்பதால் தான் நாங்கள் மேல் அதிகாரிக்கு புகார் கொடுத்தோம் என்றால் ஆமாம்.

7. மேற்படி புகாரை தவிர தனியாகத்தான் புகார் எழுதி மேல் அதிகாரிகளுக்கு கொடுத்தோம் என்றால் சரிதான். அந்தபுகாரை அனுப்பி தான் உடனடியாக நடவடிக்கை எடுக்க சொல்லி ஐஜி நடவடிக்கை எடுக்க சொன்னார் என்றால் ஆமாம். மேற்படி புகாரை எந்த காவல்நிலையத்திற்கு அனுப்பினார்கள் என்றால் மகளிர் காவல்நிலையத்திற்கு அனுப்பினார்கள். ஐஜி டம் கொடுத்தபுகாரை தான் அனைத்து மகளிர் காவல்துறையினர் பதிவு செய்து என்னையும், எனது மகளையும் விசாரித்தார்கள். அதன்பின்பு போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் போலிசார் எதிரிகளை எங்கு இருக்கிறார்கள் என்று தேடி கண்டுபிடித்து கொடுப்பதாக சொன்னார்கள். அதன்பின்பு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் திருச்சி Mediation க்கு போட்டார்கள். அதன்பின்பு மதுரை உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பினார்கள்.

8. மேற்படி விபரங்களை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது மகள் அடிக்கடி வெளியூரில் சென்று தங்கிவிடுவார் என்றும், குழந்தையை விட்டுட்டு சென்றுவிட்டார் என்றும், குழந்தையை பாதுகாக்க எதிரி அறிவுரை சொல்லியும் மகள் கேட்காததால் மகள் தன்னிசையாக எனது வீட்டில் தங்கிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

9. எனது மருமகன் எனது மகளை வாழச்சொல்லி மணப்பாறை சார்பு நீதிமன்றத்தில் சேர்ந்து வாழக்கோரி வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் செய்தார். அது சம்மந்தமாக மணப்பாறை சமரசம் மையத்தில் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எனது மகள் தான் 1ம் எதிரியுடன் வாழ மறுத்தால் தான் மீண்டும் நீதிமன்றத்திற்கு வழக்கை அனுப்பிவிட்டார்கள் என்று சொன்னால் அது பொய். தற்போதும் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் எனது மகளை எந்த கொடுமைப்படுத்தவில்லை என்றும், எந்தவித வரதட்சணை கொடுமை செய்யவில்லை என்றும், எனது மகளுக்கு

ஆதாரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி எனது மகளுடன் சேர்ந்து வாழத்தான் வழக்கு போட்டுள்ளார் என்றும், எனது மகள் தான் சேர்ந்து வாழ மறுத்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.